செ.வெ.எண்.01 நாள்.02.10.2017

அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளை முன்னிட்டு,
அண்ணல் காந்தியடிகள் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, தீபாவளி கதர் சிறப்பு தள்ளுபடி விற்பனையை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள், தலைமையில் தொடங்கி வைத்தார்.

--------

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, கதர் கிராம தொழில்கள் உதவி இயக்குநர் அலுவலக கதர் விற்பனை நிலையத்தில் இன்று (02.10.2017) அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற விழாவில், மாண்புமிகு ஆதிதிராவிடர்நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அண்ணல் காந்தியடிகள் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். அதன் பின்பு, கதர் கிராம தொழில்கள் தீபாவளி சிறப்பு தள்ளுபடி முதல் விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தொடங்கி வைக்க, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

கதர் கிராம தொழில்கள் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையினை தொடங்கி வைத்து, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தெரிவித்ததாவது:-

அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் விழா நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதனை முன்னிட்டு, இன்றைய தினம் (02.10.2017) அண்ணல் காந்தியடிகள் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. மேலும், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பாளையங்கோட்டை கதர் விற்பனை நிலையத்தில் சிறப்பு தள்ளுபடி விற்பனை துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்விற்பனை நிலையத்தில், கதர் வேஷ்டிகள், துண்டுகள், பெட்சீட்டுகள், சட்டை துணிகள், மெத்தை விரிப்புகள், தலையணை உறைகள், மெத்தைகள், தலையணைகள், பட்டுப்புடவைகள் சிறப்பு தள்ளுபடி விற்பனை செய்யப்படவுள்ளது. கதர் ரகங்கள், பாலி வஸ்திரா ரகங்கள், பட்டு ரகங்கள் ஆகியவற்றிற்கு 30%, உல்லன் ரகங்களுக்கு 20% தள்ளுபடி வழங்கப்படுகிறது. அரசு அலுவலர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு 10 தவணையில் திரும்ப செலுத்தும் வகையில் கடன் விற்பனை செய்யப்படுகிறது.

இது தவிர, தீபாவளி சிறப்பு விற்பனைக் குறியீடாக ரூ.56 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள், அரசு அலுவலர்கள் அனைவரும் கதர் துணிகளையும், கதர் உற்பத்தி பொருட்களான சோப்பு மற்றும் இதர பொருட்களை வாங்கி பயனடையுமாறும், திருநெல்வேலி மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட விற்பனை குறியீட்டினை எய்திட ஒத்துழைப்பு அளிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர்.முருகையாபாண்டியன், திரு.செல்வமோகன்தாஸ்பாண்டியன், திரு.மனோகரன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சு.ஜெகவீரபாண்யடின், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (செய்தி) திரு.வெ.சீனிவாசன், (விளம்பரம்) திரு.எம்.எஸ்.மகாகிருஷ்ணன், கதர் கிராமத் தொழில்கள் அலுவலக கண்காணிப்பாளர் திரு.செந்தில்குமார், உதவி கதர் அலுவலர் திரு.கோபாலகிருஷ்ணன், கதர் வாரியப் பணியாளர்கள் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.